தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 111/ந/2021
நாள். 07.03.2022

திரு.சு.செந்தட்டிக்காளை,
அறந்தாங்கி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
அறந்தாங்கி நகராட்சி. – எதிர்மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, வார்டு எண். 23, ராஜகோபால் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு.சு.செந்தட்டிக்காளை என்பவரின் 21.06.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.06.2021 அன்று பெறப்பட்டு 111/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**ஆணை**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, வார்டு எண். 23, ராஜகோபால் தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு.சு.செந்தட்டிக்காளை என்பவர் தமது மனுவில் :–

"நான் அறந்தாங்கி நகராட்சியில் களப்பணி உதவியாளராக பணியாற்றி வருகிறேன். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சியின் 3வது வார்டான எழில் நகர் 13ம் வீதியில் வசித்து வரும் திரு.S.சேகர் என்பவர் அறந்தாங்கி நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார். நகராட்சியில் பிறப்பு, இறப்புச் சான்று வழங்கும் பொறுப்பு இவரிடம் உள்ளது. பிறப்பு, இறப்புச் சான்று வாங்க வரும் பொதுமக்கள் அதற்கான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி இரசீது பெற்றாலும், பொதுமக்களிடம் சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.300/– முதல் 500/– ரூபாய் வரை லஞ்சமாக பெற்றுக்கொண்டு சான்றிதழ் வழங்கி வருகிறார். இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். மேலும் இந்நகராட்சியில் 76 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 30 டெங்கு ஒழிப்பு பணியாளர்கள், 22 இலவச கழிப்பிடப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களில் சிலர்

தனது சூழ்நிலை காரணமாக விடுமுறையில் சென்றால், ஒப்பந்த துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் திரு.மெய்யநாதன் என்பவர் மூலம் வருகை பதிவேட்டில் வேலைக்கு வந்ததாக கணக்கு காட்டி மாதம் இலட்சக் கணக்கில் நகராட்சி பணத்தை கொள்ளையடித்து வருகிறார். இந்த விபரம் வெளியில் தெரியாமல் இருக்க தனித்தனியாக மூன்று வருகைப் பதிவேடுகளை பராமரித்து வருகிறார். இது மட்டுமல்லாமல் கொரோனா காலத்தில் தடுப்பு நடவடிக்கைக்காக வாங்கிய கிருமி நாசினிகள் அனைத்திலும் நகராட்சி நிர்வாகத்திடம் அனுமதி பெற்ற எடை அளவிலிருந்து பகுதி மட்டும் வாங்கி, பாக்கியை எடைக்கு பணமாக பெற்றுக்கொண்டு நகராட்சி நிர்வாகத்திற்கு போலிக் கணக்கு காட்டி வருகிறார். அதுமட்டும் அல்லாமல் வண்டிகளுக்கு போடும் டீசல், புகை மருந்து தெளிக்க பயன்படும் டீசல், பெட்ரோல் அனைத்திலும் ஊழல் செய்து மாதம் இலட்சக் கணக்கில் நகராட்சி பணத்தை சுருட்டி வருகிறார். இதை யாராவது வெளியில் தெரியப்படுத்தினால் அவர்களை பணியில் இருந்து நீக்கிவிடுவேன் என்று மிரட்டுகிறார். இதில் என்னால் சேகரிக்கப்பட்ட சில நகல்களை ஆதாரமாக என் கைவசம் வைத்துள்ளேன். இதில் ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கிய பிப்ரவரி மாதச் சம்பள ரசீதும், ஒப்பந்ததாரருக்கு நகராட்சியில் இருந்து பிப்ரவரி மாதம் வழங்கிய காசோலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் மாதம் எவ்வளவு பணத்தை சுருட்டி உள்ளார் என்ற விபரம் தெரிய வரும். மேற்கூறிய ஆதாரங்கள் தங்களுக்கும் தேவைப்படும் பட்சத்தில் அதை உரிய நேரத்தில் தங்களிடம் நேரில் வந்து சமர்ப்பிக்கிறேன். ஆகவே அவர் மீது உரிய விசாரணை செய்து துறைரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்''.

2) 2.9.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்நிலையில் இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 01.12.2021 அன்று இம்முறை மன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறும், விசாரணையின் போது நகராட்சி ஆணையர் உரிய விளக்க அறிக்கையை தாக்கல் செய்யுமாறும் 22.11.2021 நாளிடப்பட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

இம்முறைமன்ற நடுவத்தில் 01.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகி மனுதாரரான திரு.சு.செந்தட்டிக்காளை அவர்கள் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"அறந்தாங்கி நகராட்சியில் களப்பணி உதவியாளராக ( Field Assistant) நிரந்தரப் பணியில் பணியாற்றும் நான், அறந்தாங்கி நகராட்சியில் சுகாதார ஆய்வராகப் பணியாற்றும் திரு. சேகர் என்பவர் துப்புரவு ஆய்வராக கடந்த 15 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். இவர், பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்குவதில் பொதுமக்களிடம் கையூட்டு பெறுகிறார். மேலும், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையை கூட்டி, வருகைப் பதிவேட்டில் பணியாளர்கள் வந்ததாக கணக்கு காட்டி, பணத்தை கொள்ளையடித்து வருகிறார். இதற்காக 3 வருகைப் பதிவேடுகளை மேற்கண்ட திரு. சேகர் பராமரித்து

வருகிறார். மேலும், அறந்தாங்கி நகராட்சிக்கென கிருமி நாசினி வாங்கும்போது எடை அளவில் பாதி மட்டும் வாங்கி, பாக்கியை எடைக்கு பணமாக பெற்றுக்கொள்கிறார். இச்செயலுக்கு என்னை உடந்தையாக இருக்குமாறும் கோருகிறார். உடந்தையாக மறுப்பதால், என்னை பயமுறுத்துகிறார். மேற்கண்ட விஷயங்கள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், மண்டல அலுவலர், ஆணையர் ஆகியோருக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அறந்தாங்கி நகராட்சியில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுவரும் திரு. சேகர், துப்புரவு ஆய்வர் மீது உரிய நடவடிக்கை எடுத்திட இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக வருகைப் பதிவேடு போன்ற ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

3) இம்முறைமன்ற நடுவத்தில் 01.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகி அறந்தாங்கி நகராட்சி ஆணையாளராக பணிபுரியும் திருமதி.தோ.லீனாசைமன் அவர்கள் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"கடந்த 2019 ஆம் ஆண்டு அறந்தாங்கி நகராட்சியில் நிரந்தரமாக ஆணையர் நியமிக்கப்படாத நிலையில், ஒரு வார காலத்திற்கு முன்புதான் நான் ஆணையராக பொறுப்பேற்றேன். நான் ஆணையாளராக பொறுப்பேற்று ஒரு வார காலம் மட்டுமே ஆனதால், இந்நேர்வில் தெரிவிக்கப்பட்டுள்ள கிருமி நாசினி போன்ற பொருட்களை எவ்விதம் வாங்கப்பட்டது, பொருட்கள் வாங்கப்பட்ட தொகையினை மற்ற நகராட்சிகளில் வாங்கப்பட்ட தொகையுடன் ஒப்பீடு செய்யப்பட்டதா போன்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியவில்லை, மேலும், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத் தொகை சரிவர வழங்கப்பட்டதா என்பதை அறியும்பொருட்டு, ஊதியம் பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பந்தப் பணியாளர்களின் வருகைப்பதிவேட்டில் உள்ள எண்ணிக்கையை என்னால் ஒப்பீடு (Compare) செய்யப்படவில்லை, மேலும், பணியாளர்களை அனுப்பும் ஒப்பந்ததாரருக்கு, ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட மாதாந்திர ஊதியத் தொகை எவ்வளவு என்கின்ற விவரம் எனக்கு தெரியாததால், அவையும் இம்முறை மன்றத்தில் கூற இயலவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) மேலும் இது தொடர்பான தனது 20.01.2022 நாளிட்ட அறிக்கையில் அறந்தாங்கி நகராட்சி ஆணையர் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு ஆய்வாளர் திரு.சி.சேகர் என்பவர் மீது, தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.சு.செந்தட்டிக்காளை என்பவர் கொடுக்கப்பட்ட புகார் மனு தொடர்பாக 1.10.2021 தேதியிட்ட செயல்முறை உத்தரவில் திரு.ஆர்.அன்பழகன் நகரமைப்பு ஆய்வாளரை

விசாரணை அலுவலராக நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது. அன்னாரின் 20.10.2021ம் தேதிய குறிப்பில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகள் பார்க்க வேண்டியுள்ளதால் புகார் மனுவின் மீது விசாரணை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் திரு.ஆர். அன்பழகன் நகரமைப்பு ஆய்வர் தற்போது தேவகோட்டை நகராட்சிக்கு பணிமாற்றுதலில் சென்றுவிட்டார். 1.10.2021–ல் திரு.சி.சேகர் துப்புரவு ஆய்வாளருக்கு வழங்கப்பட்ட குறிப்பிற்கு அன்னாரின் 26.11.2021ல் பதிலில் இந்நகராட்சி பிறப்பு மற்றும் இறப்புச்சான்றுகள் வழங்க தகவல் மையம் மூலம் உரிய மனுக்கள் வழங்கப்பட்டு அதற்குரிய தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு பின்பு கணினியில் உள்ள Work List மூலம் சான்று தயார் செய்யப்பட்டு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்கப்படுகிறது. மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் வாங்கப்பட்ட மாஸ்க் மற்றும் கையுறை பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் முறையாக இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் கொரோனா காலகட்டத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் விவரம் தொடர்பாக உரிய பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்று துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளதாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5) இந்நேர்வில் மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் மற்றும் ஆணையரின் அறிக்கை, ஆணையரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:-

அறந்தாங்கி நகராட்சியில் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரியும் திரு.சேகர் பிறப்பு இறப்பு சான்றிதழுக்கான தொகையை பெற்று அதனை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது கொடுத்தாலும் பொதுமக்களிடம் சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.300/– முதல் ரூ.500/– வரை லஞ்சம் பெறுகிறார் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கான ஆதார ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்பதால் இதனை ஆதாரமற்ற குற்றச்சாட்டாகவே இந்த முறைமன்ற நடுவம் கருதுகிறது. மற்ற புகார்களை பொருத்தவரை ஆணையர் திரு.ஆர்.அன்பழகன் நகரமைப்பு ஆய்வாளரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார். நிர்வாக காரணங்களால் உரிய நேரத்தில் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் திரு.ஆர்.அன்பழகன் நகரமைப்பு ஆய்வாளர், தேவக்கோட்டை நகராட்சிக்கு பணிமாறுதலில் சென்று விட்டார் என்ற ஆணையரின் கூற்று ஏற்கத் தக்கதல்ல. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. இது பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயலாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

6) விசாரணை அலுவலர் திரு.ஆர்.அன்பழகன் விசாரணை மேற்கொள்ளாதற்கு உள்ளாட்சி தேர்தல் பணிகளைக் காரணம் காட்டியது ஏற்கப்படத்தக்கதல்ல. 2021 ஆம் ஆண்டு 10 ம் மாதம் தேர்தல் பணிகள் முழுவீச்சை அடையவில்லை. இது ஏமாற்றுச் செயல். அவர் மீது துறைசார்ந்த

ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. ஒரு களப் பணியாளர் கொடுக்கும் புகாரிலே இவ்வளவு மெத்தனம் காட்டிய சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

திரு.ஆர்.அன்பழகன், நகரமைப்பு ஆய்வாளர் உரிய காலத்தில் விசாரணை மேற்கொள்ளாததற்கு உரிய விளக்கத்தை கோருமாறு ஆணையிடப்படுகிறது. மேலும், திரு.ஆர்.அன்பழகன் நகராட்சி ஆய்வாளருக்கு பதில், வேறு ஒரு தகுதியான அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து உரிய விதிகளின்படி விசாரணை மேற்கொண்டு, உரிய அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு அறந்தாங்கி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. விசாரணை அறிக்கையை பொறுத்து உரிய மேல்நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.சு.செந்தட்டிகாளை,
ராஜகோபால் தெரு, வார்டு எண்.23,
அறந்தாங்கி - 614 616.

2) நகராட்சி ஆணையர்,
அறந்தாங்கி நகராட்சி, அறந்தாங்கி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

08/03/22
செயலாளர்.

08/03/22